and donation to National Defence Fund and the gold and the donations to Defence Fund received at the functions were handed over to local officials, as usual.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இதில் அமைச்சர்கள் மட்டும் தங்கப் பத்திரத்திற்காக எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

MR. SPEAKER : The question does not arise.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி தனியாகக் கேள்வி வேண்டும். அமைச்சர்களிடத்தில் அதிகமாகத் தங்கம் இல்லை.

திரு. து. ப. அழகமுத்து : அமைச்சர்களுக்கு மொத்தச் சுற்றுப்பிரயாண செலவு ரூ. 51,000 என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு அமைச்சரும் எவ்வளவு பிரயாணப் படி பெற்றுக்கொண்டார்கள் என்ற விவரம் கூற முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

திரு. செ. மாதவன் : தேர்தல் பிப்ரவரியில் நடக்கும் என்றால், அதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னால் அமைச்சர்கள் அபிஷியல் டூர் போகக்கூடாது என்ற சம்பிரதாயத்தை போன முறை அனுசரித்தார்கள். அதே ஏற்பாட்டை இந்த முறையும் ஏற்றுக்கொள்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதெல்லாம் பற்றி சென்ற முறை அல்லது அதற்கு முன்பு என்னென்ன கட்டுப்பாடுகள் அனுசரிக்கப்பட்டு வந்தனவோ, அவைகளெல்லாம் இப்பொழுதும் அனுசரிக்கப்படும்.

* 350 கேள்வி.— திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் ரஷ்யா, மற்ற கம்யூனிஸ்ட் நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து திரும்பிய தொழில் அமைச்சர் அவர்களுக்கு நமது மாநில சர்க்கார் பிரயாணப்படி ஏதேனும் தந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

## மின்சாரக் கம்பங்களுக்குச் சேதம்

* 351 கேள்வி—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 30—4—1966-ல் அடித்த புயலினால் திண்டிவனம் வட்டம், வானூர் தொகுதியில், குறிப்பாக வானூர் பிர்க்காவில் சாய்ந்து விட்ட மின்சாரக் கம்பங்களெல்லாம் நிமிர்த்தப்பட்டுவிட்டனவா ?

(இ) இல்லையெனில், அவற்றிற்கான காரணங்கள் யாவை ?